Technical Paper 28 tam
April 2003
Online Version
April 2003

**CATAD 2001 and IFSP**

# திட்டமிடலில் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறை

கைநூல்

INTEGRATED FOOD SECURITY PROGRAMMME
TRINCOMALEE

42 Huskison Street
31000 Trincomalee
Sri Lanka

phone 026-22023
22687
fax 026-22296
e-mail ifspsl@sri.lanka.net
internet www.ifsp-srilanka.org

CATAD internet www.agrar.hu-berlin.de/sle

GTZ internet www.gtz.de
NEPC internet www.nepc.lk

Sri Lanka - German Development Cooperation

# முகவுரை

சமூக மேம்பாட்டு செயற்திட்டங்களுக்கான திட்டமிடல் பணிகளை மேற்காள்ளுவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்தி கண்காணிப்பதற்கும் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையைப் பயன்படுத்துவது பற்றிய வழிகாட்டலை இந்தக் கைநூல் உங்களுக்கு வழங்குகிறது. இந்தக் கைநூல் IFSP-CATAD செயற்திட்டம் 2001 இன் ஒரு விளைவு ஆகும். இலங்கையில் அமைந்திருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிப்புற்ற சமூகங்கள் கையாளும் ஜீவனோபாய தந்திரோபாயங்களைப் பற்றிய ஒரு அனுபவ மூலமான ஆய்வினை மேற்கொள்ளும் முகமாக ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையை தழுவியதான ஆய்வொன்றினை ஆய்வு அணியினர் மேற்கொண்டனர்.

திருகோணமலை ஒருங்கிணைக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு செயற்திட்டத்திற்கான (IFSP) குறிப்பான தேவைகளுக்கு பொருந்தக்கூடியதாகவே இந்தக் கைநூல் உருவாக்கப்பட்டிருந்தாலும் பங்கேற்பு முறையிலான சமூக மேம்பாட்டினை ஆதரிக்கும் வேறு செயற்திட்டங்களுக்கும் இது பயனுடையதாக இருக்கும்.

இந்தக் கைநூல் மூன்று கற்கை அலகுகளைக் கொண்டுள்ளது:

| | |
|---|---|
| கற்கை அலகு I | ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையில் உள்ள அடிப்படைத் தத்துவங்களை அறிமுகப்படுத்துவதுடன் செயற்திட்ட நடவடிக்கைகளால் ஏற்படும் தாக்கங்களை புரிந்து கொள்ளுவதற்கு எவ்வாறு இதனைப் பயன்படுத்த முடியும் என்பதையும் அறிமுகப்படுத்துகிறது. |
| கற்கை அலகு II | செயற்திட்ட முகாமைத்துவ வட்டத்தினுள் எவ்வாறு LSA ஒருங்கிணைக்கப்பட முடியும் என்பதை இது ஆராய்கிறது. |
| கற்கை அலகு III | செயற்திட்டங்களுக்கான திட்டமிடல், அவற்றை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் ஆகிய நானாவித படிமுறைகளுக்கு ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையை பிரயோகிப்பதற்கு வழிகோலும் ஒரு திட்டக்கோப்பை உருவாக்குகிறது. |

செயற்திட்டங்களுக்கான திட்டமிடல் மற்றும் அவற்றை கணிப்பிடுதல் பணிகள் ஆகியவற்றிற்காக ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையைப் (LSA) பயன்படுத்துவதைப் பற்றி 2001 ஆம் ஆண்டு இளவேனிற் காலப்பகுதியில் பல பயிற்சிப்பட்டறைகள் சமர்ப்பிக்கப்பட்டு IFSPயினதும் பங்காளி நிறுவனங்களினதும் தொழில் நிபுணர்களுடன் மேலும் கலந்துரையாடப்பட்டது. இந்த பயிற்சிப் பட்டறைகளின் வாயிலாக பெறப்பட்ட அனுபவங்கள் இக் கைநூலின் வடிவத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

# கற்கை அலகு I: ஜீவனோபாய தொகுதி அணுகுமுறை (LSA)

இக் கைநூலினதும் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையினதும் அடிப்படை நோக்கங்களைப் பற்றிய விளக்கங்களை இந்த முதலாவது கற்கை அலகு பாவனையாளருக்கு வழங்குகிறது. இந்த கற்கை அலகு பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளது:

- ஜீவனோபாய தொகுதி அணுகுமுறை பற்றிய ஒரு பொதுவான புரிந்துணர்வை உருவாக்குதல்
- ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையினுள்ளே அபிவிருத்தி செயற்திட்டங்களின் நடவடிக்கைகளுக்கான சந்தர்ப்பங்களையும் செயற்திட்டங்கள் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய பகுதிகளையும் இனங்கண்டு அவைகளை சிபாரிசு செய்தல்.

## ஜீவனோபாய தொகுதி அணுகுமுறை

ஒரு குறிப்பிட்ட புறவுரு நிலைமைகளில் ஒரு தனிநபர், ஒரு குடும்பம் அல்லது ஒரு கிராமத்தில் வசிக்கும் ஒரு சமூகம் எவ்வாறாக நடந்து கொள்கிறது என்பதை சீர்தூக்கிப் பார்க்கும் ஒரு விதம் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையாகும். ஒரு கிராமத்தில் வசிக்கும் மக்களோ அல்லது அங்கு வசிக்கும் சமூகங்களோ தமது வருமானங்களை எவ்வகையான சூழல்களில் ஈட்டுகிறார்கள் என்பதை ஜீவனோபாய தொகுதியின் நானாவிதமான மூலகங்களும் விபரிக்கின்றன.

வரைபடம் **M1**: ஜீவனோபாய தொகுதி




(சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்திலிருந்து தழுவி அமைக்கப்பட்டது – DFID, 1999)

ஒரு கிராமவாசியினுடைய ஜீவனோபாயம், அவருக்குத் தேவையான உணவு மற்றும் போஷாக்குப் பாதுகாப்பு ஆகியவற்றை அவர் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான செயற்பாடுகளையும் மற்றும் அவருக்குள்ள ஆற்றல்களையும் ஆதனங்களையும் கொண்டதாக உள்ளது. ஜீவனோபாயத் தொகுதியின் நானாவிதமான மூலகங்ளும் வருமாறு:




ஒரு கிராமவாசி தன்னுடைய வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்காக அவருக்குள்ள சந்தர்ப்பங்களை தீர்மானிக்கக்கூடிய புறவுரு நிபந்தனைகளை **பாதிப்புறு சூழல்** நிர்ணயிக்கிறது. பாதிப்புறு சூழலானது கிராமவாசிகளின் வாழ்க்கை முறையைப் பாதிக்கின்றது ஆனால் பாதிப்புறு சூழல் மீது கிராமத்தினர் தாமே செல்வாக்கு செலுத்த முடியாது. பாதிப்புறு தன்மையையுடைய சூழல் நீண்டகால முறைமைகளையும் (காலநிலை, நாட்டில் நிலவும் அரசியல் சூழல், பொருளாதார நிலைமை) திடீர் அதிர்ச்சிகள் (திடீர் விலைமாற்றங்கள், வன்முறைகள் மற்றும் சண்டை) போன்ற குறுகியகால நிகழ்வுகளையும் கொண்டுள்ளது.




ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்பம் பயன்படுத்தக்கூடிய வளங்கள் **மூலதன ஆதனங்கள்** என அழைக்கப்படுகின்றன. நாம் ஆறு விதமான மூலதன ஆதனங்களை வகைப்படுத்தலாம்: இயற்கை வளங்கள் (நீர், நில வளங்கள் முதலியன), சமூக வளங்கள் (அயலவர்களுடனான சமூக வலைப் பின்னல்கள் முதலியன), அரசியல் வளங்கள் (அரசியல் ரீதியாக அதிகாரங்களைக் கொண்டவர்களின் உதவிகளைப் பெறக்கூடியமை சமூக முதலின் ஒரு உப முதலாகும்), நிதி (சேமிப்பு, கடன்கள், பணக்கையிருப்பு கடனடிப்படையில் பொருட் கொள்வனவு முதலியன) மற்றும் மனிதவள முதல் (ஆற்றல்கள், விடயங்களைப் பற்றிய அறிவு, நல்ல தேக ஆரோக்கியம் முதலியன).




**கட்டமைப்புகளும் செயன்முறைகளும்**, குடும்பங்கள் தமது மூலதன ஆதனங்களை பெற்றுக் கொள்ளும் மார்க்கங்களையும் அளவுகளையும் தீர்மானிக்கின்றன (குறிப்பிட்ட ஆதனங்களை அவர்கள் பயன்படுத்த முடியுமா இல்லையா என்பதும் எந்தவகையில் அவற்றைப் பயன்படுத்துவது என்பதும்). ஒரு கிராம வாழ்க்கைக்கு அத்தியாவசியமான அல்லது ஒரு கிராமத்திலே நிலவுகின்ற சட்டதிட்டங்கள், விதிமுறைகள், அங்குள்ள அரசாங்க அமைப்புகள் போன்ற முறைசார்ந்த நிறுவனங்கள் ஆகியவை கட்டமைப்புகள் ஆகும். மறுபக்கத்தே, செயன்முறைகள், முறைசாராத விதங்களில் பிரயோகிக்கப்படும் விளையாட்டு விதிகளாகும். ஒரு ஜீவனோபாயத்தினுள்ளே, மக்கள் தமது முதன்மை ஆதனங்களை பெற்றுக் கொள்ளும் விதங்களை மாற்றியமைக்கவோ அல்லது அவற்றை பெற்றுக் கொள்ளும் விதங்களை தீர்மானிக்கவோ செயன்முறைகளால் முடியும்.




கிராமத்தவர்களின் ஜீவனோபாயத்தினுள்ளே தமது தினசரி வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்காகவும், சில குறிப்பிட்ட விளைவுகளை சாதித்துக் கொள்ளுவதற்காகவும் ஒரு தனிநபர் அல்லது ஒரு குடும்பம் **ஜீவனோபாய தந்திரோபாயங்களை** உருவாக்கிக் கொண்டு அவற்றைக் கையாளுகின்றனர். ஒரு ஜீவனோபாயத்தினுள்ளே தமது பாதிப்புறு தன்மைகளின் தாக்கங்களை குறைத்துக் கொள்வதற்காக குடும்பங்கள் தம்மிடமுள்ள முதன்மை ஆதனங்களை ஒன்றிணைத்து பலதரப்பட்ட ஜீவனோபாய தந்திரோபாயங்களை கொண்ட ஒரு தொகுதியை உருவாக்கி அதனைக் கையாளுகின்றன. படிப்படியாக மாற்றமடையும் முறைமைகளுக்கு ஏற்ப ஜீவனோபாய தந்திரோபாயங்கள் தம்மை மாற்றியமைத்து (மாற்றியமைத்தல்) வன்முறைகள் மற்றும் சண்டைகள் போன்ற குறுகியகால அதிர்ச்சிகளை சமாளிக்கின்றன (ஈடுகொடுத்தல்)



ஒரு சமூகத்திலே கையாளப்படும் ஜீவனோபாயத்தின் மீது செயற்திட்ட விளைவுகள் ஏற்படுத்தும் தாக்கங்களை **பின்னூட்டு வளையங்கள்** விபரிக்கின்றன. பின்னூட்டு வளையங்கள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைவதுடன் அவை ஒரு குறிப்பிட்ட செயற்பாட்டினை மேற்கொள்ளும் குடும்பத்தினை பாதிப்பதுடன் அயலிலுள்ள குடும்பங்களையும் பாதிக்கக் கூடும்.

ஒரு ஜீவனோபாயத்தைப் பற்றிய சகல அம்சங்களையும் சீர்தூக்கி ஆராயும் நோக்கினை ஜீவனோபாய தொகுதி அணுகுமுறை கைக்கொள்கிறது. ஒரு தனிநபரோ அல்லது குடும்பங்களோ தமது அன்றாட ஜீவனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தமது மூலதன ஆதனங்களை ஒன்றிணைத்து ஜீவனோபாய தந்திரோபாயங்களை எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பதை இது தெளிவாக எடுத்துக் கூறுகிறது. ஆகவே நாம் இரண்டு வினாக்களை கருத்திற் கொள்கிறோம்:

- ஒரு தரப்பட்ட பாதிப்புறு சூழலில் ஏற்படக்கூடிய உணவு பாதுகாப்பின்மையின் போது அதை சமாளிப்பதற்கு எந்தவகையான மூலதன ஆதனங்களின்மீது (வளங்கள்) குடும்பங்கள் தங்கியிருக்க முடியும்?
- குடும்பங்கள் தமது மூலதன ஆதனங்களைப் பெற்றுக்கொள்வதில், கட்டமைப்புகளும் செயன்முறைகளும் எவ்வகையில் செல்வாக்கு செலுத்துகின்றன?

## தலையீடு, தாக்கம் ஆகியவற்றிற்கான சந்தர்ப்பங்கள்

பின்வரும் வினா IFSP யிற்கும் அதனுடைய பங்காளி நிறுவனங்களுக்கும் ஒரு பிரதான வினாவாகும்:

- **கிராமத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினில் சிறப்பான மாற்றங்களை ஏற்படுத்தும் முகமாக அவர்களுடைய ஜீவனோபாய தந்திரோபாயங்களில் எந்த சந்தர்ப்பங்களில் IFSPயும் அதனுடைய நடைமுறைப்படுத்தும் பங்காளிகளும் தமது ஆதரவினை வழங்க முடியும்?**

IFSP யினராலும் அதனுடைய பங்காளிகளாலும் கிராமத்தவர்களிடையே மனோநிலை மாற்றங்களும் நடத்தை மாற்றங்களும் ஏற்படுவதற்கு உற்சாகப்படுத்த முடியுமே தவிர அவற்றை அவர்களிடம் பலாத்காரமாக திணிக்க முடியாது. கிராமத்தவர்களுக்கு **உந்து சக்திகளை** உருவாக்குவதன் மூலம் அவர்கள் நிலைத்திருக்கக்கூடிய ஜீவனோபாய தந்திரோபாயங்களை கையாளுவதற்கு நிறுவனங்கள் உற்சாகமூட்ட வேண்டும்.

### வரிப்படம் M2 : IFSP மற்றும் பங்காளருக்காகிய தலையீட்டு சந்தர்ப்பங்கள்



## வரிப்படம் M2 : IFSP மற்றும் பங்காளருக்காகிய தலையீட்டு சந்தர்ப்பங்கள்

ஒரு ஜீவனோபாய தொகுதியினுடைய நானாவிதமான மூலகங்களையும் கருத்தில் எடுத்துக் கொண்டால், IFSPயும் அதனுடைய பங்காளிகளும் அந்த மூலகங்களில் இரண்டின் மேல் தாக்கங்களை ஏற்படுத்த முடியும்: அவையாவன மூலதன ஆதனங்களில் ஒன்றான குடும்பங்கள் மற்றும் கட்டமைப்புகளும் செயன்முறைகளும் ஆகும் (வரிப்படம் M2 ப் பார்க்க). IFSP யால் பாதிப்புறு சூழலை மாற்றுவதென்பது இயலாத காரியம் ஏனெனில் பாதிப்புறு சூழல் தேசிய மட்டத்திலிருந்து உருவாக்கப்படுதுடன் இதன்மீது IFSP யினால் செல்வாக்கு செலுத்த முடியாது.

தாக்க சந்தர்ப்பங்களினுடைய மூன்று அணுகுமுறைகளும் மூன்று தரங்களினான தலையீடுகளைக் கொண்டுள்ளன:

(i) *அதிர்ச்சிகளுக்கு முகம் கொடுத்தல் (ஆதன அடிப்படையிலான ஆதரவு).* வளங்களற்ற, பாதிப்புறக்கூடிய குடும்பங்களால் இத்தகைய அதிர்ச்சிகளுக்கு முகம் கொடுக்க இயலாத சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய தீவிரமான நெருக்கடிகளில் இருந்து மீட்சி பெறுவதற்கு அவர்களுக்கு தற்காலிகமான ஆதரவு தேவைப்படலாம். ஆகவே IFSP கிராமத்தவரிடையே **உள்ளூற மறைந்திருக்கும் ஆற்றல்களுக்கு** ஆதரவு வழங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

(ii) *நடைமுறைகளுக்கு ஏற்ப தம்மை மாற்றியமைத்தல் (கட்டமைப்புகள், செயன்முறைகள் ஆகியவற்றினூடாக வழங்கப்படும் ஆதரவு).* அரசசார்பு பங்காளி நிறுவனங்கள் தமது ஒழுங்கமைப்பு முறைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு மேலதிகமாக, சமூக மூலதனத்தை நிறுவுவதற்கும் தமது சமூக நிறுவனங்களில் மக்கள் தமது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு சமூக வலைப்பின்னல்களை (அயலவர்களுடைய ஆதரவு) ஸ்திரப்படுத்தலுடன் வெளிப்படையானதும் வகைகூறக்கூடியதுமான (accountable) சமூக நிறுவனங்களை உற்சாகப்படுத்துவது அத்தியாவசியமான நடவடிக்கைகளாகும். இதற்கு மேலதிகமாக பொருளாதார நிலையங்களை (வங்கிகள்) கிராமத்து பொருளாதாரத்துடன் இணைப்பது அவசியமாகும். **கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நீக்குவதில்** IFSP தனது கவனத்தை செலுத்த வேண்டும்.

(iii) *மாற்றமடையும் சூழ்நிலைகளில் வாழ்க்கையை கொண்டு நடத்தக்கூடிய ஆற்றலை ஊக்குவித்தல் (ஆட்சிமுறை கட்டமைப்புகளை உணர்வூட்டல்).* சகல பங்காளர்களும் ஒளிவுமறைவில்லாமலும் அவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும் கருமங்களை ஆற்றுமாறு தனது பங்காளி நிறுவனங்களையும் மற்றைய சம்பந்தப்பட்ட அமைப்புக்களையும் IFSP வறபுறுத்த வேண்டும். **வகைகூறத்தக்க விளையாட்டு விதிமுறைகளுக்கு** IFSP தனது ஆதரவினை வழங்க வேண்டும்.

ஜீவனோபாயத் தொகுதியினுள்ளே அடங்கும் **இந்த தலையீட்டு சந்தர்ப்பங்கள்** IFSP யினுடையதும் அதனுடைய பங்காளிகளிகளினுடையதும் பலதரப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளன:

**(i) சமூக செயற்திட்டங்கள்**

- கிராமத்திலுள்ள சமூகங்களின் பௌதீக வளங்களாகிய முதலீட்டு மூலதனங்களையும் (நீர்ப்பாசன குளங்கள், பாதைகள்) மானிட முதலீடுகளையும் (முன் பாடசாலைகள்) மீளக் கட்டியெழுப்பல்

**(ii) வறுமை (குழுநிலை) செயற்திட்டங்கள்**

- பாதிப்புறக்கூடிய நிலையிலுள்ள குடும்பங்கள் தமது வருமானத்தையும் உணவையும் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ளும் முகமாக அவர்களுடைய வருமான உற்பத்திக்கான அடிப்படை ஆதனங்களை வழங்குதல்.

**(iii) சுகாதார, போஷாக்கு நிகழ்ச்சித் திட்டம்**

- கிராமத்தவர்கள் தாம் உட்கொள்ளும் உணவின் பயன்களையும் அவற்றின் பாவனை முறைகளையும் மேலும் முன்னேற்றுவதற்கும் காலக் கிரமத்தில் மானிட

முதலீட்டை (ஆரோக்கியம்) முன்னேற்றுவதற்கும் ஏதுவாக அவர்கள் மத்தியில் ஆரோக்கியம் மற்றும் போஷாக்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

- பாடசாலை செல்லும் குழந்தைகளுடைய மானிட முதலை (ஆரோக்கியம்) மேம்படுத்தும் முகமாக அவர்களுக்கு போஷாக்கு நிறைந்த உணவை வழங்கல்.

**(iv) சமூக உணர்வூட்டல் (செயற்படுத்தும் பங்காளிகளின் ஆற்றலை கட்டியெழுப்பல்)**

- ஒரு வகைகூறத்தக்க விதத்தில் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் முகமாக சமூக அடிப்படையில் அமைந்த அமைப்புகளையும் முறைசாரா விதங்களில் செயலாற்றும் குழுக்களையும் உற்சாகப்படுத்தல்.
- வெளிப்படையான சமூக கட்டமைப்புகளும் செயன்முறைகளும் உருவாவதை ஆதரித்தல் - அதாவது சமூக மூலதனம் (அயலவர் உதவி) மற்றும் வெளிப்படையான சமூக நிறுவனங்கள் (அமைப்புகளும் விதிமுறைகளும்).

**(v) சேவை வழங்குநர்களினதும் பங்காளி நிறுவனங்களினதும் ஆற்றல்களை கட்டியெழுப்பல்**

- வெளிப்படையான கட்டமைப்புகளும் செயன்முறைகளும் உருவாவதை மிகுதிப்படுத்தல்.
- ஒரு வகைகூறத்தக்க விதத்தில் கிராமங்களில் வாழும் சமூகங்களிற்கு ஆதரவு வழங்குமாறு அரசசார்பு சேவை வழங்குநர்களையும் அரசசார்பற்ற சேவை வழங்குநர்களையும் உற்சாகப்படுத்தி அவற்றிற்கு வலிமையூட்டல்.

**தாக்கங்களை உண்டு பண்ணக்கூடிய இந்த ஐந்து சந்தர்ப்பங்களும்** பூரணப்படுத்துபவைகளாக (complementary) கருதப்படுவது முக்கியமானதாகும். ஐந்து சந்தர்ப்பங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்பதை இது குறிக்கிறது. உதாரணமாக, சமூக செயற்திட்டங்கள் ஒரு சமூக உணர்வூட்டல் மற்றும் ஆற்றலை கட்டியெழுப்பல் செயன்முறையில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. எம்மால் இந்த மூன்று செயற்பாடுகளையும் வேறுபடுத்த முடியாது. இவ்வாறாக IFSP யின் அணுகுமுறையானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதும் (பிரிபட முடியாதன) மக்கள் நலனை நோக்காகக் கொண்டதுமாகும் (மக்கள் பங்குபற்றுவர்).

மேலும், தாக்க சந்தர்ப்பங்களை கண்காணிப்பது அத்தியாவசியமானதாகும். இவ்வாறாக நாம் முக்கியமான அம்சங்களை வேறுபடுத்தி எம்மால் ஏற்படுத்த முடிந்த தாக்கத்தினை விபரிக்க வேண்டும். நாம் ஏற்படுத்த எண்ணியிருக்கும் ஒரு தாக்கத்தின் குணாதிசயங்களை சுருக்க விளக்கங்களை காட்டிகள் அளித்து எமது தலையீட்டின் மூலம் நாம் சாதித்த வெற்றியை “மைல் கல்லாக” காண்பிக்கின்றன. ஆகவே காட்டிகள் பின்வரும் அடிப்படைகளில் அமைக்கப்படுகின்றன:

- ஏற்படுத்த முடிந்த தாக்கங்களைப் பற்றிய அனுமானங்கள் சரியானவையாக இருந்தனவா என்றும் எந்த அளவிற்கு சரியானவையாக இருந்தன என்றும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்கள் அல்லது கருதியிருக்காத மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்தனவா என்றும் எம்மால் இனங்காணப்படக்கூடிய அடிப்படையில்,
- பெறப்பட்ட திரளான தகவல்களிலிருந்து முடிவுகளை மேற்கொள்ளும் செயன்முறைக்கு அவசியமான தகவல்களை தெரிவு செய்யும் முகமாக,
- சமாளிக்கக்கூடிய வடிவத்தில் அமைந்திருக்கும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக,

காட்டிகள் ஒரு நிலைமையினுடைய பலவிதமான தோற்றப்பாடுகளையும் குறிப்பதுடன் இத்தகைய நிலைமையை ஒரு திட்டமான பரிமாணமுள்ள நிலைமையாக சுருக்குகிறது. சாதாரணமாக ஒரு நிலையை விபரிப்பதற்கு அல்லது ஒரு மாற்றத்தை மதிப்பிடுவதற்கு ஒரு காட்டி மாத்திரம் போதுமானதல்ல. ஆகவே ஒரு தொகுதி தர மதிப்பீட்டு காட்டிகளை அல்லது தொகை மதிப்பீட்டு காட்டிகளை பயன்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும். (VAULHAUS 2000, பக்கம் 29)

# கற்கை அலகு II : செயற்திட்ட வட்டத்தினுள் LSA ஐ எவ்விதம் ஒருங்கிணைப்பது?

சமூக அபிவிருத்தி திட்டமிடலுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு குறைநிரப்பி உத்தியாக, திருகோணமலையில் IFSP ஆற்றும் கருமங்களில் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறை (LSA) எவ்விதம் பொருந்துகிறது என்பதை இரண்டாவது கற்கை அலகான "செயற்திட்ட வேலைகளில LSA ஐ எவ்வாறு ஒருங்கிணைப்பது" விபரிக்கிறது.

ஒரு ஜீவனோபாயத்தையும் அதனை சார்ந்த சமூகத்தையும அதன் முழுமை நிலையிலேயே LSA நோக்குகிறது. அதன் காரணமாக, முக்கிய பங்கினை ஆற்றும் சகல அம்சங்களையும் மற்றும் காரணிகளையும் LSA கருத்தில் கொள்வதுடன் ஜீவனோபாய தொகுதியானது அது தொழிற்படும் விதத்தில் ஏன் அவ்வாறு தொழிற்படுகிறது என்றும் மக்களுடைய ஜீவனோபாய தந்திரோபாயங்களுக்கு எதிர்காலத்தில் ஆதரவளிக்கக்கூடிய எந்த வாய்ப்புகள் தற்போதைய நிலைமையில் உள்ளூற மறைந்திருக்கின்றன என்பதை கண்டுபிடிப்பது அதன் நோக்கமாகும். ஆகவே சமூகத்தினுள்ளே, தனிநபர்களிலும் குடும்பங்களிலும் உள்ளூறவுள்ள திறமைகளையும், (மூலதன ஆதனங்கள) தமது நாளாந்த சீவியத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பிரயோகிக்கப்படும் ஜீவனோபாய தந்திரோபாயங்களையும், உள்ளூறவுள்ள இனங்காணப்பட்ட திறமைகளையும் பெற்றுக் கொள்ளும்போது கட்டமைப்புகளும் செயன்முறைகளும் செலுத்தும் செல்வாக்கு ஆகியவற்றை LSA கருத்தில் கொள்கிறது. கிராமத்தினுடைய பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்துவதற்காகவும் வருமான மார்க்கங்களை பல்வகைப்படுத்துவதற்காகவும் செயற்திட்ட வேலைகளின் மூலம் ஆதரவு வழங்கப்படக்கூடிய செழுமையை தரவல்ல அசலான தந்திரோபாயங்களை இனங்காண்பதற்கும் LSA உத்தேசிக்கிறது.

ஒரு கிராமத்தில் செயற்படுத்தப்படும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் முன்னோடியான தேவைகள் மதிப்பீட்டிலிருந்து அதன் இறுதி நிகழ்வான செயற்திட்ட இறுதி மதிப்பீடு வரை அடுத்தடுத்து நிகழும் படிகளை செயற்திட்ட வட்டம் சித்தரிக்கிறது (வரிபடம் M3 ஐப் பார்க்க). செயற்திட்ட வட்டத்தின் பலதரப்பட்ட படிகளில் ஜீவனோபாய மாதிரி பயன்படுத்தப்பட முடியும். அதாவது:

## வரிப்படம் M3: IFSP யினது வேலைக்கும் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறைக்கும் இடையிலான தொடர்பு:




(மாற்றியமைக்கப்பட்டது, BAUER et al.1999)

செயற்திட்ட வேலைகளின் போது செயற்திட்ட வட்டத்தில் ஒரு பயன்மிக்க உத்தியாக LSA ஒருங்கிணைக்கப்பட முடியும். வரிபடம் M3 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு மூன்று நிலைகளில் LSA பிரதானமாக பிரயோகிக்கப்பட முடியும்.

- **மதிப்பிடுதல்** பணிகளுக்காக: பாதிப்புறக்கூடிய சூழ்நிலையில் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொள்ளுதலும் மாறுபட்ட நிலைமைகளிலும் தலையீடுகள் தொடர்ந்தும் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை மதிப்பிடுதலும்.
- **திட்டமிடல்** பணிகளுக்காக: ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒரு தலையீட்டு தந்திரோபாயத்தை உருவாக்கல்.
- **கண்காணிப்பு** மற்றும் **மதிப்பீட்டு** பணிகளுக்காக: மக்கள் கையாளும் ஈடுகொடு தந்திரோபாயங்களின் மீதும் ஜீவனோபாயங்களின் மீதும் செயற்திட்ட தலையீடுகள் ஏற்படுத்தும் தாக்கங்களை மதிப்பிடுதல்.

சமூக மேம்பாட்டில் ஒரு பிரதான பாத்திரத்தை சமூக உணர்வூட்டுனர்கள் வகிக்கின்றனர். செயற்திட்ட வட்ட முகாமைத்துவம் மற்றும் LSA சம்பந்தமாக சமூக உணர்வூட்டுனர்களின் பிரதான கடமை பின்வருவனவாகும் :

- ஜீவனோபாய தந்திரோபாயங்களையும் அவைகளுடைய அடிப்படைக் காரணிகளையும் இனங்கண்டு இலக்கு குழுவினரான பாதிப்புறு சூழலில் உள்ள மக்களுடன் அவைகளைப் பற்றி கலந்துரையாடல் (ஒரு குறிப்பிட்ட நடைமுறையை மக்கள் ஏன் பின்பற்றுகின்றனர்?).
- கிராமத்தவரின் ஜீவனோபாய தந்திரோபாயங்களை இரண்டு மட்டங்களிலும் கட்டுப்படுத்தும் காரணிகள் எவையென கிராமத்தவர்களுடன் கலந்தாலோசித்து பகுத்தாய்வு செய்வது: மூலதன ஆதனங்கள் மற்றும் கட்டமைப்புகளும் செயன்முறைகளும் .
- மக்களினுடைய ஜீவனோபாயங்களை பாதிப்புறு சூழல் எவ்வகையாக பாதிக்கின்றது என்றும் அவர்களது நாளாந்த ஜீவனத்துக்கு அது எந்தவகையான பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றும் அவர்களுடன் கலந்துரையாடுவது.
- கிராமத்தவருடனான சம்பாஷணையின் மூலம் அவர்களுக்கான உதவியை எந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கலாம் என்பதை இனங்காணுதல் (மக்களுடைய ஜீவனோபாய தந்திரோபாயங்களை ஆதரிப்பதற்காக எந்த மூலதன ஆதனங்களையும் எந்த கட்டமைப்புகளையும் IFSP பலப்படுத்த முடியும்?).
- ஜீவனோபாயங்களின் மீது IFSP யினுடைய செயற்பாடுகள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணித்து அவற்றை மதிப்பீடு செய்தல் (IFSP வழங்கும் ஆதரவு கிராமவாசிகள் தமது ஜீவனோபாய தந்திரோபாயங்களை கிரமமாக கொண்டு நடத்துவதற்கு வழிவகுத்துள்ளதா?).

செயற்திட்ட வட்டம் செயற்படும் மூன்று நிலைகளிலும் LSA புறவுரு எவ்வாறாக பயன்படுத்தப்பட முடியும் என்பதை கற்கை அலகு III விபரமான விளக்கத்தை அளிக்கும்.

# கற்கை அலகு III: செயற்திட்டங்களை திட்டமிட்டு அவற்றை கணிப்பிடுதல் மற்றும் ஜீவனோபாயத்தின் மீது அவை ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆகியவற்றை கணிப்பிடுதல் எவ்வாறு?

நாம் சென்ற அத்தியாயத்தில் செயற்திட்ட வட்டத்தைப் பற்றியும் எந்த நிலையில் ஜீவனோபாய தொகுதி அணுகுமுறையை செயற்திட்ட வட்டத்தில் இணைத்துக் கொள்ள முடியும் என்பது பற்றியும் கருத்தில் எடுத்திருந்தோம். கீழ்வரும் அத்தியாயத்தில், "கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களை நாம் எவ்வாறு கணிப்பீடு செய்வது, திட்டமிட்டு கண்காணிப்பது என்றும் ஒரு ஜீவனோபாயத்தின் மீது அவை ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களைப் பற்றியும்" நாம் ஆராய்வோம்.

**ஜீவனோபாயத்தைப் பற்றியும் அவை விளைவிக்கும் தாக்கத்தைப் (LIA)** பற்றியும் பகுத்தாயும் நோக்கம் யாதெனில்:

- ஒரு குறிப்பிட்ட ஜீவனோபாய தொகுதி மீது, அதாவது ஒரு கிராமத்தின் மீது அல்லது ஒரு சமூகத்தின் மீது, திட்டமிடப்பட்ட தலையீடு ஏற்படுத்தும் பாதிப்புகளை அறிந்து கொள்வதாகும்.

செயற்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைப் பற்றிய பகுத்தாய்வு இரண்டு காலக் கிரமப்படியுள்ள நிலைகளைக் கொண்டுள்ளது: எமது தலையிடல் தந்திரோபாயத்தை திட்டமிடல் மற்றும் எமது தலையிடல் தந்திரோபாயத்தை அமுல்படுத்தும் போது அது ஏற்படுத்தும் தாக்கத்தையும் அதனை அமுல்படுத்தியதன் பின்னர் அது ஏற்படுத்தும் தாக்கத்தையும் கணிப்பிடுவது (கண்காணித்தல்). ஒரு தலையீட்டுக்கு முன்னதாக ஜீவனோபாயத்தை பகுத்தாய்வது முதல் படியாகும் (முன்னரான கணிப்பு). அந்த நேரத்தில் நிலவிய நிலைமையை கணிப்பிட்ட பின்னர் பெறப்பட்ட சமூக சூழல் பற்றிய அறிவு (matrix) ஒரு குறிப்பிட்ட ஜீவனோபாயத் தொகுதியில் **எமது தலையிடலை திட்டமிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் மற்றும் அதனை மதிப்பீடு செய்வதற்கும், ஏற்படுத்தப்பட்ட தாக்கத்தை பகுத்தாய்வு செய்வதற்கும்** வழிகாட்டலை வழங்குகிறது.

## வரிப்படம் M4: ஜீவனோபாயம், தாக்கம் ஆகியவற்றை பகுத்தாய்தல்: செயற்திட்ட வேலைக்கான விடய அடிப்படையிலான மற்றும் காலக் கிரமப்படியிலான கணிப்பீட்டு நிலைகள்

| I) ஜீவனோபாய பகுத்தாய்வு | II) தாக்க பகுத்தாய்வு | | |
|---|---|---|---|
| | தலையிடல் பகுத்தாய்வு | தாக்க கணிப்பீடு | காட்டிகளும் அவதானிப்புகளும் |
| குறிப்பிட்ட ஜீவனோபாய தொகுதியினதும் அதனுடைய மூலகங்களினதும் தற்போதைய நிலைமை என்ன? | எமது தலையிடலின் மூலம் எந்த வளங்களிற்கு நாம் ஆதரவு வழங்க எண்ணியுள்ளோம்? எமது தலையீட்டின் மூலம் எந்த ஜீவனோபாய தந்திரோபாயத்திற்கு ஆதரவு வழங்க எண்ணியுள்ளோம்? எந்தப் பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளோம்? எந்த மாற்றங்களை நாம் அவதானிக்க எண்ணியுள்ளோம்? | எந்த மாற்றங்களை செயற்திட்டம் சாதித்துள்ளது? பங்காளருடன் செயற்திட்ட அமுலாக்கலில் ஈடுபட்டிருந்த போது சம்பந்தப்பட்ட ஊழியர்கள் எவ்வகையான அனுபவத்தைப் பெற்றனர்? எந்தவகையான மாற்றங்களை முழு சமூகத்திலும் எம்மால் அவதானிக்க முடிந்தது? | எமது தலையீட்டின் மூலம் நாம் சாதிக்க முடிந்த "மைல்கல்கள்" யாவை? நாம் எந்த இடங்களில் முன்னேற்றமடைய வேண்டும்? |
| ↓ | ↓ | ↓ | |
| தற்போதுள்ள நிலைமையை பகுத்தாய்தல் (திட்டமிடலுக்கு முன்னர், முன்னரான கணிப்பு) | தலையிடலை திட்டமிடல் (நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரான பகுத்தாய்வு) | கண்காணிப்பும் மதிப்பீடு செய்தலும் (அமுல்படுத்துவதற்கு முன்னரும் அமுலாக்கலின் பின்னரும் நடைபெறும் பகுத்தாய்வு) | |

(IFSP-CATAD 2001)

இந்த வரிப்படமானது **இரண்டு பிரதான கருப்பொருள் பகுதிகளுடன் மூன்று கணிப்பீட்டு காலக் கிரமப்படியிலான நிலைகள்** ஆகிய இரண்டையும் உள்ளடக்கி செயற்திட்ட திட்டமிடுனருக்கான வழிகாட்டல் வினாக்களை உருவாக்குகிறது. ஆகவே இந்த தாயம் (matrix), ஜீவனோபாய தொகுதியினுடைய மூலப்பொருட்களையும், கருப்பொருள் மற்றும் காலக் கிரமப்படி பரிமாணங்களையும் கொண்டுள்ள மூன்று நிரல்களை அடக்குகிறது.

இந்த தாயமானது, மேலே குறிப்பிடப்பட்ட சகல மூன்று படிகளின் போதும் பாவனைப்படுத்த முடியும்: முதலாவதாக, இது ஒரு கிராம செயற்திட்டத்தினை முழுமையாக அமுல்படுத்தக்கூடிய சாத்திய நிலைமைகளை கணிப்பீடு செய்வதற்கான ஒரு சரிபார்த்தல் (checklist) பட்டியலாக உள்ளது: இதன் மூலம் சேகரிக்கப்பட்டு பகுத்தாயப்பட்ட தகவல்கள், செயற்திட்ட அமுலாக்கலின் போது கண்காணிப்பு பணிகளுக்கும், செயற்திட்ட அமுலாக்கலின் பின்னர் மதிப்பீட்டு பணிகளுக்கும் முக்கியமானதாக விளங்கும்.

இதிலுள்ள பலம் யாதெனில், வெறுமனே செயற்திட்ட பெறுபேறுகளை அளவிடாமல், இது தனது கவனத்தை **மக்களினுடைய உண்மையான நடத்தையின்** பாலும், செயற்திட்ட தலையீடுகளின் தாக்கத்தை ஜீவனோபாய தந்திரோபாயங்களின் மேலும் செலுத்துகின்றது. திட்டமிடல் நோக்கங்களுக்காக, ஜீவனோபாய தொகுதியின் சில மூலப்பொருட்களை கணக்கிடுவது பயனுள்ளதாக இருக்கும், அதாவது, மூலதன ஆதனங்கள், விளைவுகள் மற்றும் பின்னூட்டு வளையங்கள் ஆகியன. கணக்கிடப்பட முடியாத மூலப்பொருட்கள், உதாரணமாக, கட்டமைப்புகள் செயன்முறைகள் ஆகியவற்றை காட்டிகள் முறைமையின் படி மதிப்பிட வேண்டும். **கணக்கிடுதலும் மதிப்பிடுதலும்** (**quantification and valuation**) செயற்திட்டத்தினை அமுல்படுத்தக்கூடிய சாத்தியநிலை, வேறுபட்ட சூழ்நிலைகளில் செயற்திட்டம் நிலைத்திருத்தல், குறைவான செலவீட்டுத் தொகை மூலமான நன்மை மற்றும் செயற்திட்டம் முற்றுப் பெற்ற பின்னர் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் நிலைத்திருத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் நானாவிதமான மாற்று செயற்திட்டங்களை ஒப்பிடவும் கணிப்பிடவும் அத்தியாவசியமானவையாகும்.

அடுத்துவரும் பக்கங்கள் தாயத்தின் நானாவிதமான நிலைகளை உள்ளடக்குகின்றன. பிரதான வினாக்கள், ஒன்றை ஒன்று சார்ந்து படிப்படியாகவுள்ள தாயத்தின் கட்டமைப்பினூடாக திட்டமிடுனரை வழிநடத்திச் சென்று தாயத்தின் ஒவ்வொரு மூலப்பொருளிலும் பிரதான விடயத்தினை நிரப்புமாறு பணிக்கின்றன.

## பணித்தாள் 1 : ஜீவனோபாய தொகுதி பகுத்தாய்வு

| | | |
|---|---|---|
| ஜீவனோபாய தொகுதி பகுத்தாய்வு | | தற்போதைய நிலைமை<br><br>"முன்னரான கணிப்பு" (தலையீட்டிற்கு முன்னர்) |
| பாதிப்புறு சூழல் | | ➔ பின்வருவனவற்றை கருத்திற் கொண்டு ஜீவனோபாயத்தின பாதிப்புறு தன்மையை தீர்மானிக்கும் தற்போது நிலவும் புறஉரு நிலைமைகள் யாவை:<br>• அரசியல்<br>• பொருளாதார<br>• சமூக<br>• சூழல் பரிமாணங்கள்? |
| மூலதன ஆதனங்கள | நிதி | ➔ தனது நிதி, மானிட, இயற்கை, பௌதீக, சமூக மற்றும் அரசியல் மூலதனங்களை கருத்திற் கொண்டு எந்த பிரதான வளங்களில் ஜீவனோபாயம் தங்கியிருக்க முடியும்? |
| | மானுட | |
| | இயற்கை | |
| | பௌதிக | |
| | சமூக | |
| | அரசியல் | |
| கட்டமைப்புகளும் செயன்முறைகளும் | | ➔ சமூகத்திலும், பிரதேச மற்றும் மாகாண மட்டத்திலும், விளையாட்டு சட்ட விதிமுறைகளிலும் எந்த அமைப்புகளை ஜீவனோபாயத்துக்கு முக்கியமானவையென நீங்கள் இனங்காண்கின்றீர்கள்? |
| | | ➔ எந்தவகையான செல்வாக்கு செலுத்தக்கூடிய சூழ்நிலைகள் (உ+ம். சந்தை முறைமை, பாதுகாப்புத்தடைகள், தற்காலிக பீடைகள்) ஜீவனோபாய தொகுதி மீது செல்வாக்கு செலுத்தி அதனை மாற்றியமைக்கின்றன? |
| | | ➔ வளங்களைப் பெற்றுக் கொள்வதை அவைகள் எவ்வாறு நேரடியாகவும் மறைமுகமாகவும் தீர்மானிக்கின்றன? |
| ஜீவனோபாய தந்திரோபாயங்கள் | | ➔ ஜீவனோபாயத்திலே வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கு தேவையான செயற்பாடுகள் யாவை? |
| | | ➔ அதிர்ச்சிகளையும் அழுத்தங்களையும் குறுகிய காலத்துக்கு சமாளிப்பதற்கு எந்தவிதமான செயற்பாடுகள் கைக்கொள்ளப்படுகின்றன (ஈடுகொடுத்தல்)? |
| | | ➔ படிப்படியக உருவாகும் (எதிர்மாறான) நடைமுறைகளுக்கான (மாற்றியமைத்தல்) நீண்டகால ஈடுகொடு உபாயமாக எந்த செயற்பாடுகளை நாம் கருதலாம்? |
| விளைவுகள் | | ➔ தேவைப்படுகின்ற செயற்பாடுகளாலும் அவற்றினூடு பெறப்பட்ட விளைவுகளாலும் எத்தகைய தாக்கங்களை எம்மால் அவதானிக்க முடிகிறது? |
| பொருளாதார | | ➔ செயற்பாடுகள் நிதி மூலதனங்களை மேம்பாடடையச் செய்கின்றனவா அல்லது குறைந்து கொண்டு போகச் செய்கின்றனவா (வருமானம், உற்பத்தி வழிவகைகள், மீள் உற்பத்தி)? |
| சமூக | | ➔ சமூகத்தில் ஒருவர் வகிக்கும் பாத்திரம், அவருடைய அந்தஸ்து மற்றும் சமூக உறவுகள் ஆகியவற்றை செயற்பாடுகள் ஆதரிக்கின்றனவா? |
| சுற்றாடல் | | ➔ இந்த செயற்பாடுகள் சுற்றாடலின் மீது முக்கியமான செல்வாக்குகள் எதனையும் செலுத்துவதை எம்மால் அவதானிக்க முடிகிறதா? |

## பணித்தாள் 2: தலையிடல் பகுத்தாய்வு

| | | |
|---|---|---|
| தலையிடல் பகுத்தாய்வு | | ➔ தலையிடலை திட்டமிடல்<br><br>செயற்திட்ட அமுலாக்கலுக்கு முன்னரும், அமுலாக்கலின் போதும் |
| செயற்திட்ட பிரதேசத்தின் வரலாறு | | ➔ பெயர், பிரதேசம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எமது செயற்திட்ட பிரதேசம் எந்த இடத்தில் அமைந்துள்ளது? |
| | | ➔ செயற்திட்ட பிரதேசத்தில் எவ்வளவு மக்கள் வசிக்கின்றனர்? |
| | | ➔ நாம் கரிசனை கொள்ள வேண்டிய மக்களின் எண்ணிக்கை என்ன? |
| மூலதன ஆதனங்கள் | | ➔ எமது தலையீட்டின் மூலம் எந்த வளங்களை நாம் ஆதரிக்க எண்ணியுள்ளோம்? |
| | | ➔ எந்த வளங்களின் மீது எமது தலையீடு நேரடியாக செல்வாக்கு செலுத்துகிறது? |
| | | ➔ எந்த வளங்களின் மீது எமது தலையீடு மறைமுகமாக செல்வாக்கு செலுத்துகிறது? |
| கட்டமைப்புகளும் செயன்முறைகளும் | ஆதரவு வழங்கல் | ➔ எமது அமுல்படுத்தும் பங்காளிகளாக எந்த அமைப்புகள் உள்ளன? எவருடன் நாம் நேரடியாக கருமம் ஆற்றுகிறோம்? |
| | நேரடியாக செல்வாக்கு செலுத்தல் | ➔ எமது தலையீட்டின் மூலம் எந்த அமைப்பை நாம் மறைமுகமாக சம்பந்தப்படுத்துகிறோம் அல்லது மறைமுகமாக செல்வாக்கு செலுத்துகிறோம்? |
| | ஆற்றலை, ஆனால் முக்கியமானவை | ➔ அமைப்புகள், சட்டங்கள், விளையாட்டு விதிகள் ஆகியவற்றினுடைய நடத்தை மற்றும் செயற்பாடுகள் மீது எந்த செல்வாக்கையும் செலுத்தாது எவற்றை நாம் முக்கியமானதாகக் கருதுகிறோம்? |
| ஜீவனோபாய தந்திரோபாயங்கள் | | ➔ எமது தலையீட்டின் மூலம் எந்த ஜீவனோபாய தந்திரோபாயத்தை நாம் ஆதரிக்க எண்ணியுள்ளோம்? |
| | | ➔ எந்த இடத்தில் நாம் தாக்கத்தை ஏற்படுத்த எண்ணியுள்ளோம்? |
| திட்டமிடப்பட்ட தாக்கங்கள் | | ➔ நாம் அவதானிக்க எண்ணியுள்ள தாக்கங்கள் எவை? |
| பொருளாதாரம் | | ➔ நிதி ஆதனங்களின் (வருமானம், உற்பத்தி வழிவகைகள், மீள் உற்பத்தி) மீது எந்தவகையான தாக்கத்தை ஏற்படுத்த நாம் எண்ணியுள்ளோம் |
| சமூக | | ➔ சமூகத்தில் வகிக்கும் பாத்திரங்கள், அந்தஸ்து, சமூக உறவுகள் என்பவைகள் சம்பந்தமாக எந்தவகையான தாக்கங்களை ஏற்படுத்த நாம் எண்ணியுள்ளோம்? |
| சுற்றாடல் | | ➔ சுற்றாடலின் எந்த புறவுரு நிலைமைகள் பலவீனமுற்று முக்கியமானவையாக கருதப்படுகின்றன?<br>அதி முக்கியமானவற்றை இனங்காண்க. |

## பணித்தாள் 3: தாக்க கணிப்பீடு

| | |
|---|---|
| தாக்க கணிப்பீடு | ➔ IFSP யினதும் அவர்களது பங்காளி நிறுவனங்களினதும் தலையீடுகளை கண்காணித்தலும் மதிப்பிடுதலும்<br><br>அமுல்படுத்தியதற்குப் பிந்தியது |
| ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் | ➔ செயற்திட்டம் எந்த மாற்றங்களை ஏற்படுத்தியது?<br>(பட்டியல்படுத்தப்பட்ட அளவுப் பிரமாணங்களில் மிகப் பொருத்தமான ஒன்றையாவது பின்பற்றி ஒரு பலமான காட்டியை உருவாக்க முயற்சி செய்தல்.) |
| பொருளாதார ஸ்திரத்தன்மை | ➔ நிதி மூலதன ஆதனங்களில் ஒரு அதிகரிப்பை உங்களால் அவதானிக்க முடிகிறதா? |
| சுற்றாடல் பேணப்படல் | ➔ ஜீவனோபாய தொகுதியினுடைய சுற்றாடலின் மீது எமது தலையீட்டின் காரணமாக ஒரு சாதகமான மற்றும் எதிர்மாறான தாக்கங்களை உங்களால் அவதானிக்க முடிகிறதா? |
| சமூக இணக்கப்பாடு | ➔ சமூக வலைப் பின்னலில் ஒரு ஸ்திரத்தன்மையை உங்களால் அவதானிக்க முடிகிறதா? (உ+ம்) அயலவர்களிடமிருந்து கிடைக்கும் உதவி அதிகரித்தல், உள்ளூர் செயற்பாடுகளில் அதிகரித்த அளவில் பங்குபற்றல். |
| நடத்தை முறை | ➔ எமது இலக்கு குழுவினரின் நடத்தையில், உத்தேசிக்கப்பட்ட ஒரு சமூக அல்லது பொருளாதார / சமூக, பொருளாதார மாற்றத்தை உங்களால் அவதானிக்க முடிகிறதா? |
| பங்காளருடனான ஒத்துழைப்பின் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் | ➔ பங்காளருடன் (சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், இலக்கு குழுவினரின் பங்களிப்பு) இணைந்து செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது நாம் என்ன வகையான அனுபவத்தை பெற்றுக் கொண்டோம்? |
| நிறுவனங்களின் கூட்டுறவு | ➔ எமது தலையீட்டுடன் எத்தனை அமைப்புகள் மற்றும் எந்த அமைப்புகள் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்டுள்ளன? |
| பங்குபற்றுகை | ➔ அமுலாக்கலின் முன்னரும் அதன் பின்னரும் எத்தனை கிராமத்தினர் ஆதரவை நாடியுள்ளனர்? |
| | ➔ சமூக வலைப் பின்னலில் ஒரு ஸ்திரத்தன்மையை உங்களால் அவதானிக்க முடிகிறதா? (உ+ம்) அயலவர்களிடமிருந்து கிடைக்கும் உதவி அதிகரித்தல், உள்ளூர் செயற்பாடுகளில் அதிகரித்த அளவில் பங்குபற்றல் |
| பின்பற்றுகையி – உள்ளூறவுள்ள ஆற்றல்கள் | ➔ எமது இலக்கு குழுவினரின் உள்ளூற மறைந்திருக்கும் ஆற்றல்களில் எந்த இடங்களில் IFSP யினரும் பங்காளிகளும் மேலதிகமாக ஆதரவினை வழங்க வேண்டும்? |
| பின்பற்றுகையி – கட்டுப்பாடுகள் | ➔ எந்த இடங்களில் IFSP யிற்கும் பங்காளிகளுக்கும் கட்டுப்பாடுகளை அகற்ற வேண்டிய தேவை உள்ளது? |
| முழு சமூகத்தின் மீதான தாக்கங்கள் | ➔ நாம் முழு சமூகத்தையும் கருத்தில் எடுத்துக் கொண்டால், எமது தலையீட்டின் மூலம் எந்த விளைவை எம்மால் அவதானிக்க முடிகிறது? |
| சாதகமான | ➔ எமது தலையீட்டின் மூலம் எந்த சாதகமான விளைவுகளை உங்களால் இனங்காண முடிகிறது? |
| எதிர்மறையான | ➔ எமது தலையீட்டின் மூலம் எந்த எதிர்மறையான விளைவுகளை உங்களால் இனங்காண முடிகிறது? |

# பணித்தாள் 4: தாக்கங்களை ஏற்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களும் காட்டிகளும்

| தாக்கங்கள் பற்றிய கணிப்பீடு | காட்டிகளும் அவதானிப்புகளும் |
|---|---|
| ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள் | உதாரணங்கள்: |
| பொருளாதார ஸ்திரத்தன்மை | குடும்பத்தினுடைய வருமானத்தின் சராசரி பெறுமானம்<br>சராசரி பெறுமானத்தின் சதவீத மாற்றம் |
| சுற்றாடல் பேணப்படல் | நிலத்தின் கீழுள்ள நீர் மட்டம் குறைதல் / அதிகரித்தல்<br>காடு மீள உருவாக்கல் செயற்பாடுகள்<br>கழிவுப்பொருள் முகாமைத்துவம் |
| சமூக இணக்கப்பாடு | • அயலவர்கள் வழங்கும் உதவி அதிகரித்தல் |
| நடத்தை முறை | கடந்த வருடகாலங்களில் கிடைக்கப் பெற்ற அதிர்ச்சிகளினால் ஏற்பட்ட குடும்ப அங்கத்தினருடைய பருவகால இடம்பெயர்வு குறைவடைந்து வருதல் |
| பங்காளருடனனான ஒத்துழைப்பின் போது கிடைக்கும் அனுபவங்கள | உதாரணங்கள்: |
| நிறுவனங்களின் ஒத்துழைப்பு | அமுலாக்கலில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்டுவரும் அமைப்புகளின் எண்ணிக்கை |
| பங்குபற்றுகை | • ஒரு கிராமத்தில் நடைபெற்ற PNA செயற்பாடுகளின் எண்ணிக்கை<br>PNA செயற்பாடுகளின் வெற்றி |
| பின்பற்றுகையின் நிகழ்தன்மை — உள்ளூறவுள்ள திறமைகள் கட்டுப்பாடுகள் | உதாரணங்கள்:<br>• சந்தைப்படுத்தல் நிலைமை<br>• சமூக முரண்பாடின்மை<br>• பாதுகாப்பு நிலைமை<br>வெளியாட்களில் தங்கியிருத்தல் |
| முழு சமூகத்தின் மீதான தாக்கங்கள் | உதாரணங்கள்: |
| சாதகமான | • உள்ளூர் செயற்பாடுகளில் அதிகரித்த / குறைந்தளவிலான பங்குபற்றுகை<br>• பொது செயற்பாடுகளுக்கான பொறுப்புக்களை முன்வந்து ஏற்றுக் கொள்ளல், அதிகரித்தல் (சபைகளிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை முதலியன). |
| எதிர்மறையான | கிடைத்த நன்மைகளைப் பகிர்ந்து பொள்ளும் போது உண்டாகும் சச்சரவுகள். |